**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**2025 - ம் ஆண்டு ஜூலை திங்கள் 18- ம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருமதி. N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

பெயர் : மாரிமுத்து — அசல் வழக்கு எண்:12/2024
த/ பெயர் : மாரியப்பன் — வாதி தரப்பு சாட்சி எண். 1
வயது : 51/2025
கிராமம் : தோணிமுடி 1-வது டிவிசன்
வட்டம் : வால்பாறை
சமயம் :
தொழில் : பி.பி.டி.சி நிர்வாக ஓட்டுனர்

1. எனது தரப்பில் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

| ஆ. எண். | ஆவணம் | ஆவண தன்மை | ஆவண குறியீடு |
|---|---|---|---|
| 1. | எனது ஆதார் அட்டை 315170014625 | அசலுடன் ஒப்பீடுசெய்யப்பட்டது | வா.சா.ஆ.1 |
| 2. | எனது வாக்காள அடையாளஅட்டை ZWY1647395 | அசலுடன் ஒப்பீடுசெய்யப்பட்டது | வா.சா.ஆ.2 |
| 3. | 08-10-2022-ம் தேதி வழங்கிய கிரேஸ்மேரி இறப்பு சான்று | அசலுடன் ஒப்பீடுசெய்யப்பட்டது | வா.சா.ஆ.3 |
| 4. | 11-01-2024-ம் தேதி வால்பாறை வருவாய் வட்டாட்சியம் வழங்கிய குறிப்பாணை | அசல் | வா.சா.ஆ.4 |
| 5. | 29-01-2024-ம் தேதியிட்டு 1,2 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ.5 |
| 6. | மேற்படிசட்ட அறிவிப்பை வட்டாட்சியர் 31-01-2024-ம் தேதி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.6 |
| 7. | மாவட்ட ஆட்சியர் 31-01-2024-ம் தேதி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் | வா.சா.ஆ.7 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான்என்ன படித்துள்ளேன் என்றால் 2-ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கும் எனது மனைவி கிரேஜிக்கு எங்கு வைத்து திருமணம்நடந்தது என்றால் முடீஸ்சில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 1991-ம் ஆண்டு திருமணம் நடந்தது. நானும் எனது மனைவியும்எத்தனை ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்து வந்தோம் என்றால் 15 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்தோம். எங்களுக்கு குழந்தைகள் இருக்கிறதா என்றால் இல்லை. நானும் எனது மனைவியும் சட்டப்படி விவாகரத்து

பெற்றுவிட்டோமா என்றால் இல்லை. நானும் எனது மனைவியும் பிரிந்து வாழ்ந்ததற்காக உடன்படிக்கை ஏதாவது ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் இல்லை. நானும் எனது மனைவியும் எங்கு வேலை செய்தோம் என்றால் இருவரும் தோணிமுடி 1-வது டிவிசனில் ஒன்றாகத்தான் வேலை செய்தோம். எனது மனைவி எதனால் இறந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். நான் 2-வது திருமணம் செய்துவிட்டேனா என்றால் 2-வது திருமணம் செய்துகொண்டேன். எந்த வருடத்தில் திருமணம்செய்துகொண்டேன் என்றால் 2005 அல்லது 2006-ஆம் ஆண்டு திருமணம் செய்தேன். எனது 2-வது மனைவி பெயர் என்ன என்றால் லட்சுமி. லட்சுமி எங்குள்ளார்என்றால் என்னுடன்தான் இருக்கிறார். எனக்கும் எனது 2-வது மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள், 1 மகள் இருக்கிறார்கள். கிரேஸ்மேரிக்கு அப்பா, அம்மா இருக்கிறார்களா என்றால் இல்லை அவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்கள் எப்போது இறந்தார்கள் என்றால் வருடம் சரியாக நினைவில் இல்லை. தற்போது நான் எங்கு இருக்கிறேன் என்றால் தோணிமுடி 1-வது டிவிசனில் இருக்கிறேன். எனக்கும் கிரேஸ்மேரிக்கு வாரிசுதாரர்கள் இருக்கிறார்கள் என்றால் இல்லை. நான் எதற்காக இந்த வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரேஸ்மேரிக்கு வாரிசு சான்று கோரி தாக்கல் செய்துள்ளேன். எதற்காக வாரிசு சான்று கேட்கிறேன் என்றால் கிரேஸ்மேரி தோணிமுடி எஸ்டேட்டில் நிரந்தர பணியாளராக பணிபுரிந்ததற்கான பணப்பலன்களைபெறுவதற்காக கேட்கிறேன். நானும் கிரேஸ்மேரியும் பிரிந்து வாழ்ந்த விவரத்தையும், எனக்கு 2-வது திருமணம் நடைபெற்றதையும், 2-வது திருமணத்தின் மூலம் வாரிசுகள் இருப்பதையும் இந்த வழக்கில் சொல்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.